**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 200/2022

Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

Name : இளங்கோ

Father's Name : பொன்னன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.03.2026.

**1,2 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கரூர் நகர காவல் நியைலத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் கார்த்திக் உடன் பணிபுரிந்த வகையில் அவர்களுடைய கையொப்பம்

எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.07.2020ம் தேதி 06.30 மணியளவில் உதவி ஆய்வாளர் கார்த்திக் நிலையப் பொறுப்பில் இருந்தபோது, சந்திரசேகரன் என்பவர் எதிரியுடன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய கு.எண்.865/2020, ச.பி.387, 506(2) இதசவின்படி வழக்கு பதிவு செய்துள்ளார். **சந்திரசேகரன் கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** அவர் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே மாலை 17.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சி சேகர், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகசர், மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததில் எதிரியை தேடி வந்ததில் 25.07.2020ம் தேதி காலை 09.00 மணியளவில் எல்ஜிபி நகர் பெட்ரோல் பங்க் அருகே நின்றுகொண்டிருந்த எதிரிகள் சூர்ய பிரகாஷ், சீனிவாசன், முருகானந்தம் ஆகியோர்களை பிடித்து விசாரித்தபோது, சூர்ய பிரகாஷ், சாட்சிகள் ராம கிருஷ்ணன், கதிரேஸ் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கத்தியை

கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர்** எதிரிகளை காரணம் கூறி கைது செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் உதவி ஆய்வாளர் கார்த்திக் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**